19th November 1963]

*282 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தற்போதுள்ள ஹை ஸ்கூலில் உள்ள ஏழாம் வகுப்பு VII Standard- -லும் மூன்றும் படிவத்திலும் (III Form) எலிமெண்டரி ஸ்கூலில் உள்ள ஏழாம் வகுப்பிலும் (VII Standard), எட்டாம் வகுப்பிலும் (VIII Standard), சீனியர் பேசிக் ஸ்கூலில் உள்ள எட்டாம் கிரேடிலும் (VIII Grade) உள்ள மாணவர்கள் அனைவரும் 1963-64 கல்வியாண்டில் ஹை ஸ்கூலில் உள்ள புதிய எட்டாம் வகுப்பிற்கு (New VIII Standard now existing in high schools) வந்து சேருவதால் உண்டாகும் தகுதி பெற்ற ஆசிரியர்கள் பற்றுக்குறையை நிவர்த்திக்க என்ன திட்டம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Pupils promoted from Form III and Standard VIII of Higher Elementary and Senior Basic Schools are admitted into Standard IX of High Schools and not into Standard VIII, while pupils promoted from Standard VII are admitted into the new Standard VIII. Although new Standard VIII was opened in the current year, old Standard VIII of Higher Elementary and Senior Basic Schools and Form III of Secondary Schools were in existence during 1962–63. The secondary grade teachers employed for those standards are therefore available for new Standard VIII in the current year.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பயிற்சிபெற்ற செகண்டரி கிரேட்; ஸீனியர் பேசிக் ஆசிரியர்கள் எந்த ஜில்லாவிலாவது பற்றுக்குறையாக இருப்பதாக அரசாங்கத்திற்கு தகவல் வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

Directorate of the Employment Exchange

*283 Q.—SRI K. B. PALANI : Will the Hon. the Chief Minister be pleased to state the procedure adopted by the Directorate of the Employment Exchange in cases of appointments made without any reference to them by Government offices?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபோன்ற விபரம் எம்ப்ளாய் மெண்ட் ஆபீசர் கவனத்திற்கு வந்ததும் எந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறு வேலை கொடுக்கப்பட்டது என்று விசாரிக்கப்படுகிறது. அவ்வாறு செய்ததற்குத் தகுந்த காரணம் இல்லை என்று தெரிந்தால் உடனே அவ்வாறு வேலையில் அமர்த்தியவர்களை வேலையினின்று நீக்கிவிட்டு காலியான அந்த இடத்தைப் பூர்த்தி செய்ய எம்ப்ளாய் மெண்ட் ஆபீஸ் மூலமாக தகுந்த நபரைத் தேர்ந்து எடுக்கும்படி வேலை கொடுப்பவருக்கு உத்திரவிடப்படுகிறது.